




சென்னை கலைவாணர் அரங்கத்தில், நேற்று (22.12.2023) இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், ஒன்றிய இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டு, தகவல் ஒளிபரப்புத் துறை அமைச்சர் அனுராக் சிங் தாக்கூர் முன்னிலையில், "கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டு போட்டிகள் 2023"–இன் சின்னம் மற்றும் இலட்சினையை வெளியிட்டார். இந்நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, இந்திய செஸ் கிராண்ட்மாஸ்டர் விஸ்வநாதன் ஆனந்த் மற்றும் வாள்வீச்சு வீராங்கனை பவானி தேவி ஆகியோர் உடனிருந்தனர்.

# விளையாட்டு வீரர்கள் போட்டியிடும் அரங்குகள் வெறும் களம் மட்டுமல்ல வாழ்க்கைப் பாடங்களின் வகுப்பறைகள்!

## ஒன்றிய விளையாட்டு - தகவல் ஒளிபரப்புத் துறை அமைச்சர் முன்னிலையில் 6வது கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகள் 2023 இலச்சினை வெளியிட்டு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரை!

**சென்னை, டிச. 23–**

**விளையாட்டு வீரர்கள் போட்டியிடும் அரங்குகள் வெறும் களம் மட்டுமல்ல வாழ்க்கைப் பாடங்களின் வகுப்பறைகள் என்று சென்னையில் நடைபெற்ற விழாவில் 6வது கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகள் 2023–இன் இலச்சினை, சின்னம், சுடர் மற்றும் ஜெர்சி ஆகியவற்றினை ஒன்றிய விளையாட்டு – தகவல் ஒளிபரப்புத் துறை அமைச்சர் முன்னிலையில் வெளியிட்டு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.**

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மற்றும் ஒன்றிய இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டு, தகவல் - ஒளிபரப்புத் துறை அமைச்சர் அனுராக் சிங் தாக்கூர் அவர்கள் முன்னிலையில், சென்னை கலைவாணர் அரங்கில் 6வது கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகள் 2023-இன் இலச்சினை, சின்னம், சுடர் மற்றும் ஜெர்சி ஆகியவற்றினை வெளியிட்டனர்.

தமிழ்நாடு அரசு மற்றும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் இணைந்து 2024-ம் ஆண்டு ஜனவரி 19-ம் தேதி முதல் 31-ம் தேதி வரை சென்னை, கோவை, மதுரை மற்றும் திருச்சி ஆகிய 4 மாவட்டங்களில் கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகள் 2023 நடத்தப்பட உள்ளது.

### 5500 விளையாட்டு வீரர்கள்!

18 வயதுக்குட்பட்டோர் பிரிவில் நடத்தப்படும் கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகள் 2023-ல், 36 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் இருந்து சுமார் 5500-க்கும் மேற்பட்ட விளையாட்டு வீரர், வீராங்கனைகள், 1600-க்கும் மேற்பட்ட பயிச்சியாளர்கள், 1000-க்கும் மேற்பட்ட நடுவர்கள் மற்றும் 1200 க்கும் மேற்பட்ட தன்னார்வலர்கள் ஈடுபட உள்ளனர்.

மேலும், இந்த போட்டியில் 27 வகையான விளையாட்டுகளுடன், தமிழ்நாட்டின் பாரம்பரிய விளையாட்டான சிலம்பம் டெமோ விளையாட்டாக (Demo Sport) இடம் பெற உள்ளது.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டு போட்டிக்கான திருவள்ளுவர் இலச்சினையை வெளியிட்டார். இந்த இலச்சினை தமிழ்நாட்டின் ஒற்றுமை, விளையாட்டுத்திறன்மற்றும் தமிழ் உணர்வினைப் பறைசாற்றுகிறது.

இதனைத் தொடர்ந்து ஒன்றிய இளைஞர் விவகாரம், விளையாட்டு, தகவல் - ஒளிபரப்புத் துறை அமைச்சர் அனுராக் சிங் தாக்கூர் அவர்கள் போட்டியின் சின்னமாக வீரமங்கை - வேலு நாச்சியாரின் உருவத்தை வெளியிட்டார்.

6-வது கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டு போட்டிக்கான "தமிழ்" என்று பெயரிடப்பட்டுள்ள சுடரினை, தமிழ்நாட்டின் ஸ்குவாஷ் விளையாட்டு வீராங்கனை ஜோஷ்னா சின்னப்பா மற்றும் ஹாக்கி வீரர் மாரீஸ்வரன் ஆகியோர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மற்றும் ஒன்றிய இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டு, தகவல்-ஒளிபரப்புத் துறை அமைச்சர் அனுராக் சிங் தாக்கூரிடம் ஒப்படைத்தனர்.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், ஒன்றிய இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டு, தகவல்-ஒளிபரப்புத் துறை அமைச்சர் அனுராக் சிங் தாக்கூர் அவர்களுடன் செஸ் கிராண்ட் மாஸ்டர் விஸ்வநாதன் ஆனந்த் மற்றும் வாள்வீச்சு வீராங்கனை பவானி தேவி ஆகியோர் கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகள்2023-ன் அதிகாரப்பூர்வ ஜெர்சியை வெளியிட்டனர்.

கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகள்2023-ன் இந்த துவக்க விழா தமிழ்நாட்டின் கலாச்சாரம், விளையாட்டு மற்றும் கொண்டாட்டம் ஆகியவற்றின் கலவையாக மட்டுமல்லாமல், இப்போட்டி வெற்றிகரமாக நடத்துவதற்கான களத்தை உருவாக்கி உள்ளது.

இந்த நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசியதாவது :

கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகள் 2023 முதல் முறையாக தமிழ்நாட்டில் 2024 ஜனவரி 19 முதல் 31-ம் தேதி வரை நடத்தப்பட உள்ளது என்பது ஒரு வரலாற்று நிகழ்வாகும். இந்த தொடக்க விழாவின் மூலம் நாமும் இப்போது வரலாற்றின் ஒரு பகுதியாக இருப்பதில் பெருமிதம் கொள்கிறோம்.

தமிழ்நாட்டின் விளையாட்டு நடவடிக்கைகள் மற்றும் திறமைகளைக் கருத்தில் கொண்டு, கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டு 2023-ஐ தமிழ்நாட்டில் நடத்த முன்வந்த ஒன்றிய அரசு, இந்திய பிரதமர் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் அவர்களுக்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒன்றிய அரசு, நமது மாநிலத்தின் விளையாட்டுத் திறனை அடையாளம் கண்டுள்ளதால், இது தமிழ்நாட்டிற்கு குறிப்பிடத்தக்க வளர்ச்சி மற்றும் பெருமையாகும். அதனால் தான் நமது மாநிலத்தில் கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகள் நடைபெற உள்ளன.

### விளையாட்டு வீரர்களை உருவாக்குவதில் சிறந்த மாநிலம்!

தமிழ்நாடு, விளையாட்டில் சிறந்து விளங்குகிறது. ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கம், சேப்பாக்கம் விளையாட்டரங்கம் முதல் வரலாற்றுச் சிறப்புமிக்க மெரினா கடற்கரை வரை தேசத்தை பெருமைப்படுத்தும் வகையில் புகழ்பெற்ற விளையாட்டு வீரர்-வீராங்கனைகளை உருவாக்குவதில் சிறந்த மாநிலமாக உள்ளது.

இன்று, நாம் கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுகளை நடத்தும்போது, இந்த பாரம்பரியத்திற்கு தொடர்ந்து பங்களித்து, அடுத்த தலைமுறை விளையாட்டு வீரர்களை வளர்த்து வருகிறோம்.

விளையாட்டுத்துறையின் மேம்பாட்டுக்காக முதலமைச்சர் அவர்கள் எடுத்து வரும் சீரிய முயற்சிகளின் பலனாக, இன்றைக்கு கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுகள் 2023, நம்முடைய மாநிலத்தில் முதல் முறையாக நடத்தப்படுகிறது.

தமிழ்நாடு அரசை பொறுத்தவரை எந்த அளவுக்கு கல்வி – சுகாதாரம் போன்ற துறைகளுக்கு முக்கியத்துவம் அளித்து வருகிறதோ, அதே அளவுக்கு விளையாட்டு மேம்பாட்டிற்காகவும் முக்கியத்துவம் அளித்து வருகிறது.

தமிழ்நாடு, விளையாட்டில் வளமான பாரம்பரியத்தைக் கொண்டுள்ளது; நமது நாட்டிற்கு பெருமை சேர்த்த சிறப்பான விளையாட்டு வீரர்-வீராங்கனைகளைத் தொடர்ந்து உருவாக்கியுள்ளது.

நாடு முழுவதும் உள்ள விளையாட்டுத் துறை சார்ந்த திறமையாளர்களை அடையாளம் கண்டு அவர்களை அங்கீகரிக்கும் வண்ணம் கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுகள் நடத்தப்பட்டுவருகிறது.




விளையாட்டுத்துறையின் மீது மிகப்பெரிய விழிப்புணர்வு இந்திய இளைஞர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது. இதன் காரணத்தால் தான், உலகின் எந்த மூலையில், எந்த விளையாட்டு போட்டி நடைபெற்றாலும், அதில் இந்திய வீரர் வீராங்கனையர்கள் வெற்றி வாகை சூடி வருகிறார்கள்.

### தமிழ்நாடு முக்கிய பங்களிப்பு!

குறிப்பாக தமிழ்நாட்டு வீரர்-வீராங்கனையரின் பங்களிப்பு மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. தடகளம் - செஸ் ஹாக்கி ஸ்குவாஷ் – என எல்லா விளையாட்டுகளிலும் தமிழ்நாட்டு வீரர் வீராங்கனையர் தனி – முத்திரை பதித்து வருகின்றனர்.

இந்த நேரத்தில், கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகள் அதிக இளைஞர்களை ஊக்குவிப்பதற்காகவும், அவர்களை விளையாட்டு நடவடிக்கைகளுக்கு ஈர்ப்பதற்காகவும் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்.

விளையாட்டில் சாதித்து வருவோருக்கு புதிய புதிய களங்களை அமைத்துக் கொடுப்பதுடன், புதிய திறமையாளர்களை அடையாளம் கண்டுஅவர்களுக்கு வாய்ப்புகளை உருவாக்கித் தர வேண்டும் என்பதில் நம்முடைய முதலமைச்சர் அவர்களும், தமிழ்நாடு அரசு உறுதியுடன் உள்ளது.

இதற்காக ஏராளமான முயற்சிகளை தொடர்ந்து எடுத்து வருகிறோம். அதில் மிக முக்கியமானது, 44 ஆவது FIDE செஸ் ஒலிம்பியாட் சென்னை மாமல்லபுரத்தில் நடத்தப்பட்டது.

கடந்த ஓராண்டில் மட்டும் ஏராளமான சாதனைகளை இன்னும் சொல்லப்போனால், பல ஆண்டுகளில் செய்ய வேண்டிய நிகழ்ச்சிகளை, ஒரே ஆண்டில் நடத்தி முடித்துள்ளோம்.

### முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டி!

கிராமப்புற பின்னணியில் உள்ள விளையாட்டு வீரர் வீராங்கனைகளை ஊக்குவிக்கும் வகையில், தமிழ்நாடு அரசு 2023-ஆம் ஆண்டு முதலமைச்சர் கோப்பை போட்டிகளை ஏற்பாடு செய்தது.

பொருளாதாரம் என்பது விளையாட்டு வீரர் - வீராங்கனையருக்கு ஒரு தடையாக இருக்க கூடாது என்பதற்காக, "தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை"-யைத் தமிழ்நாடு அரசு தொடங்கியது.

தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளையின் முக்கிய நோக்கம் பொருளாதார ரீதியாக பலவீனமான வீரர்களுக்கு நிதி உதவி வழங்குவதும், நமது மாநிலத்தின் விளையாட்டு உள்கட்டமைப்பு பணிகளை மேம்படுத்துவதும் ஆகும்.

ELITE, MIMS விளையாட்டு வீரர்களுக்கான சிறப்பு உதவித்தொகை மூலம் நிதி வழங்கிடும் வகையில் தமிழ்நாடு அரசு சார்பில் ஏராளமான திட்டங்கள் நடைமுறையில் உள்ளன.

இதுவரை, பல்வேறு அரசுத் துறைகள் மற்றும் தனியார் நிறுவனங்களிடமிருந்து அறக்கட்டளைக்கு ரூ. 22 கோடி நன்கொடையாக கிடைக்கப் பெற்றுள்ளது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். குறிப்பாக சொல்ல வேண்டும் என்றார், இந்த திட்டத்தை தொடங்கும் போது முதலமைச்சர் அவர்கள் தனது சொந்த நிதியிலிருந்து ரூ. 5 இலட்சம் நிதியுதவியாக வழங்கினார்.

கடந்த ஏழு மாதத்தில் மட்டும் ரூ. 6 கோடி ரூபாய்விளையாட்டு வீரர் வீராங்கனைகளுக்கு உபகரணங்கள் வாங்குவதற்கும், சர்வதேச போட்டிகளில் பங்கேற்பதற்கான பயணச் செலவுகள் , பல்வேறு செலவினங்களுக்காக நிதி ஒதுக்கீடு தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை மூலம் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளையின் கீழ் உதவி பெற்ற விளையாட்டு வீரர்கள் பல்வேறு பிரிவுகளில் சர்வதேச அளவில் 13 பதக்கங்களை வென்றுள்ளனர் என்பதை நான் மகிழ்ச்சியுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

அரசின் இந்த முயற்சிகளால் தான் தமிழ்நாட்டு வீரர்கள் உலகின் எந்த மூலைக்கு சென்று விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டாலும் கோப்பையுடனும் பதக்கங்களுடனும் திரும்பி வருகின்றனர்.

சீனாவில் நடைபெற்ற 19-வது ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் 28 பதக்கங்களை குவித்த தமிழ்நாட்டு வீரர்-விராங்கனையருக்கு நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ரூ.9 கோடியே 40 இலட்சத்தை உயரிய ஊக்கத்தொகையாக வழங்கினார்கள்.

தேசிய சீனியர் மகளிர் கால்பந்தாட்ட போட்டியில், தங்கம் வென்ற தமிழ்நாட்டு மகளிர் அணிக்கு ரூ.60 இலட்சத்தை ஊக்கத் தொகையாக வழங்கினோம்.

உலக கோப்பை செஸ் சாம்பியன்ஷிப் போட்டியில் வென்ற தம்பி பிரக்ஞானந்தாவுக்கு ரூ.30 லட்சம் உயரிய ஊக்கத்தொகையை கழக அரசு வழங்கியது. மாற்றுத்திறனாளி வீரர்-வீராங்கனையருக்கும் கழக அரசு தொடர்ந்து துணை நின்று வருகிறது.

சமீபத்தில் நடைபெற்ற கேலோ இந்தியா பாரா இளைஞர் விளையாட்டுகளில் கூட 20 தங்க பதக்கம், 8 வெள்ளி பதக்கம் மற்றும் 14 வெண்கலப் பதக்கங்களை வென்று தமிழ்நாடு மூன்றாவது இடத்தை பிடித்தது.

### பதக்கங்களைக் குவித்த தமிழ்நாட்டு வீரர்கள்!

மேலும், ஜெர்மனியில் நடைபெற்ற மாற்றுத்திறனாளிகளுக்கான தடகளப் போட்டியில், சீனாவில் நடைபெற்ற மாற்றுத்திறனாளிகளுக்கான ஆசிய தடகளப் போட்டி போன்றவற்றிலும் தமிழ்நாட்டு வீரர்- வீராங்கனைகள் பதக்கங்களை குவித்து பெருமைத் தேடி தந்துள்ளனர்.

கடந்த ஓராண்டில் விளையாட்டுத்துறை கட்டமைப்பை மேம்படுத்த ஏராளமான நடவடிக்கைகளை நம் திராவிட மாடல் அரசு எடுத்து வருகிறது.

சென்னையில் 10 ஆண்டுகளுக்குப் பிறகு, ஸ்குவாஷ் உலகக் கோப்பை மற்றும் ஆசிய கோப்பை ஹாக்கி ஆகியவை நடைபெற்றன. உலக சர்ஃபிங் லீக் QS 3000 மற்றும் HCL சைக்ளோத்தான் ஆகியவை நடத்தப்பட்டன.

சென்னை கிராண்ட் மாஸ்டர்ஸ் செஸ் சாம்பியன்ஷிப் 2023 போட்டியை சென்னையில் நடத்தினோம்.

தமிழ்நாட்டில் விளையாட்டுத் துறையை வலுப்படுத்துவதற்கான முயற்சிகளைத் தொடர்ந்து மேற்கொள்வோம்.

### மணிப்பூரில் வீரர்களுக்கு பயிற்சி!

மணிப்பூரில் சோதனையான நேரத்தில், மணிப்பூர் ஃபென்சிங் வீரர்களை நம்முடைய மாநிலத்திற்கு வரவேற்றோம். அவர்களின் பயண செலவு மற்றும் தங்குமிட செலவுகளைச் செலுத்தி, சென்னையில் அவர்களுக்கு பயிற்சி அளித்தோம்.

விளையாட்டு வீரர்களுக்கு மாநிலங்களுக்கிடையே பயிற்சி அளிக்க ஒன்றிய அரசு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று நான் பரிந்துரைக்கிறேன்.

இன்னொரு முக்கியமான விஷயத்தையும் இங்கே கூற விரும்புகிறேன். ஒன்றிய அரசு, கேலோ இந்தியா விளையாட்டுகளை சில பிராந்திய சுவைகளுடன் நடத்த வேண்டும். உதாரணமாக, பெயரைப் பிராந்திய மொழியில் பயன்படுத்தலாம்.

ஏனென்றால், தமிழ்நாட்டில் நடத்தும் இந்தப் போட்டியை கேலோ இந்தியா யூத் கேம்ஸ் என்று சொல்லும் போது, சிலருக்கு புரியவில்லை. வெளி மாநிலங்களில் கேலோ இந்தியா போட்டிகளை நடத்தும் போது, அந்த மாநில மொழிகளில், அதற்கான பெயரை இட வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுகள் திறமைகளின் சங்கமம் மட்டுமல்ல, மனித மனப்பான்மை, திறன்வளர்ச்சி மற்றும் சிறப்பைத் தொடர்வது ஆகியவற்றின் கொண்டாட்டம். தமிழ்நாட்டின் வளமான விளையாட்டு வரலாற்றின் பின்னணியில், விளையாட்டு மைதானங்களில் திறமைகள் மற்றும் கனவுகளின் வெளிப்பாட்டைக் காண இன்று நாம் ஒன்றுகூடியுள்ளோம்.

இந்த போட்டியில் நமது விளையாட்டு வீரர்கள் போட்டியிடும் அரங்குகள் வெறும் களங்கள் மட்டுமல்ல, அவை வாழ்க்கைப் பாடங்களின் வகுப்பறைகள்.

இந்த விளையாட்டுகளில் பங்கேற்கும் இளம் விளையாட்டு வீரர்கள் போட்டியாளர்கள் மட்டுமல்ல, கனவுகள் மற்றும் அபிலாஷைகளின் தூதர்கள். உங்கள் அர்ப்பணிப்பு, கடின உழைப்பு மற்றும் விளையாட்டுத் திறன் எங்கள் அனைவருக்கும் ஊக்கமளிக்கிறது. களத்தில் ஒவ்வொரு கணத்தையும் மதிக்கவும், சவால்களை எதிர்கொள்ளவும், விளையாட்டின் எல்லைகளைத் தாண்டி நட்பை உருவாக்கவும்.

இறுதியாக, நமது இளைஞர்களின் விளையாட்டு முயற்சிகளுக்கு ஆதரவளிப்பதற்கும் ஊக்குவிப்பதற்கும் நாம் உறுதி மொழி எடுப்போம்.

இந்த விளையாட்டுகள் வேற்றுமையில் ஒற்றுமையின் அடையாளமாக செயல்படட்டும் மற்றும் ஒவ்வொரு இளம் விளையாட்டு வீரரின் இதயங்களிலும் விளையாட்டுத் திறனின் சுடர் எரியட்டும்.

2023-ம் ஆண்டு கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகளை நாம் தமிழ்நாட்டில் தொடங்கும்போது, விளையாட்டு உணர்வு தொடர்ந்து செழித்து, வரவிருக்கும் தலைமுறைகளுக்கு ஊக்கமளிக்கும் என்று கூட்டாக அறிவிப்போம்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரையாற்றினார்.

இந்நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர், முனைவர். அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, சட்டமன்ற உறுப்பினர்கள், இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டு அமைச்சகம் மற்றும் இந்திய விளையாட்டு ஆணையத்தின் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.